உதவி செய்கிறார்கள். சில இடங்களிலே இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சில திட்டங்களை, விடுதிகளை நடத்துகின்றார்கள். தமிழகத்திலேயும், பல்வேறு திட்டங்களுக்கு என்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு உதவி கிடைக்கிறபோது, இது பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையின்படி, யாரோ குறை சொல்கின்றார்கள் என்ற காரணத்திற்காக, கழிப்பிடங்களைக் கட்டுவதை அரசு நிறுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்கள்.

*90 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரும்பாலான நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்புப் பொறியாளர்கள் அலுவலகங்கள், சென்னையிலேயே உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இவற்றை, கண்காணிப்புப் பொறியாளர்களின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் மையமாக உள்ள நகரத்திற்கு மாற்ற, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த ஊரகச் சாலை (Rural Roads Circle) மற்றும் ஆய்வு (Investigation) வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களை சென்னையிலிருந்து முறையே சேலத்திற்கும், மற்றும் திருச்சிராப்பள்ளிக்கும் 1—4—1981 முதல் மாற்றுவதற்காக உத்தரவுகள் வழங்கப்பட்டு உள்ளன. மற்ற அலுவலகங்கள் அவைகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை உத்தேசித்து சென்னையிலேயே இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த நெடுஞ்சாலைத் துறைக் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களில் பெரும்பாலானவற்றை வேறு இடங்களுக்கு, மாநகரங்களுக்கு, மாவட்டத் தலைநகரங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற எனது கோரிக்கையின் அடிப்படையில் முன்பு நெடுஞ்சாலைத் துறை பொறுப்பேற்றிருந்த அமைச்சர் அவர்கள்கூட இந்த மாமன்றத்திலே சொல்லி, நிர்வாகச் சீர்திருத்தம் என்ற அரசின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கருத்து பரிசீலிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இதிலே முக்கியமானது "ரெபடிஷன் ஆஃப் மார்ச்சஸ்"

1981 பிப்ரவரி 27]

என்பது. இதன் மூலம் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு வீண் செலவும், வீணாக நேரத்தைச் செலவழிக்கக்கூடிய குறைபாடுகளும் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகள், இந்த அலுவலகங்கள் மாநிலத் தலைநகரத்திலே இருப்பதால் ஏற்படுகின்றன. இதனால், திறன் வாய்ந்த மேற்பார்வை (Effective supervision) என்ற பணியிலும் குறைபாடுகள் ஏற்படுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் இந்த இரண்டு அலுவலகங்களை மாற்றியமைத்தாலும்கூட, இன்னும் சில அலுவலகங்களை மாற்றியமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச்சொல்லிய, "ரெபடிஷன் ஆஃப் மார்ச்சஸ்", அதாவது சரியான முறையிலே மேற்பார்வை செய்யமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. அதுபோலவே ஊரகச் சாலைகள் திட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை உடனடியாக சேலத்திற்கும், அதே நேரத்தில் இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் அலுவலகத்தை திருச்சிராப்பள்ளிக்கும் மாற்றியிருக்கிறார்கள். மொத்தம் ஒன்பது கண்காணிப்பு நிறுவனங்கள் சென்னையிலேயே இருக்கின்றன. அதிலே இரண்டு மட்டும் மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏழு நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த ஏழிலே ஒரு சில கண்காணிப்புப் பொறியாளர் வட்ட அலுவலகங்களை மாவட்டத் தலைநகரங்களுக்கே மாற்றலாமா என்பது பரிசீலனையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கண்காணிப்புப் பொறியாளர்களும், அவர்களின் அலுவலர்களும் பல காரியங்களைப் பார்க்கவேண்டிய சூழ்நிலைகள் இருப்பதால், பல சாலைகள் பராமரிக்கப்படமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக, அவர்களுடைய ஜுரிஸ்டிக்ஷனை இன்னும் குறைத்துக் கொடுக்க வேண்டும். ஆகவே இன்னும் கண்காணிப்புப் பொறியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாமா என்பது அரசினுடைய யோசனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவி.

*** 91 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவிக்கு, நேரடி நியமனத்திற்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு பரிசீலிக்குமா ?